Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. STC. 106/2025**

Preliminary Register

Deposition of **PW- 6 LW-8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சுப்ரமணியன் | Father Name | : | அண்ணதுரை |
| Village | : | தளவாய்புரம் | Taluk | : | ராஜபாளையம் |
| Age | : | 31 | Calling | : | உதவி ஆய்வாளர். – தளவாய்புரம் காவல் நிலையம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 14th day of May 2026.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது ராஜபாளையம், தளவாய்புரம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.01.2025 ம் தேதி நிலைய பொறுப்பில் இருந்தபோது கும்பகோணம் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலின் படி உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த அ.சா.1 ராமகிருஷ்ணன் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று காலை 10.00 மணிக்கு நிலைய குற்ற எண்.36/2025 ச.பி.281, 125(a) BNSன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அன்றைய தினம் காலை 11.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் அனீஸ், சதீஷ், ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார்

செய்தேன். பார்வை மகசர் மற்றும் மாதிரி **வரைபடம் முறையே அ.த.சா.ஆ.3 மற்றும் அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலானவர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் விபத்து ஏற்படுத்திய வாகனம் TN 50 AV 9491 SML பேருந்து விபத்துக்குள்ளான வாகனம் TN 50 M 5907 Pulsar இருசக்கர வாகனம் ஆகியவற்றை மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.பாபு அவர்களுக்கு அனுப்பி வாகனத்தை ஆய்வு மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுகோள் அறிக்கை கொடுத்தேன். பின்னர் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கைகள் பெற்றேன். **அந்த ஆய்வு அறிக்கைகள் அ.த.சா.ஆ.5 மற்றும் அ.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் காயம்பட்ட ராமகிருஷ்ணனிற்கு முதல் உதவி சிகிச்சை அளித்த மருத்துவர் வித்யபாரதி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும் அ.சா.1ற்கு ஏற்பட்ட காயம் சாதாரணகாயம் என காயச்சான்று பெற்றேன். **அந்த காயச்சான்று அ.த.சா.ஆ.7ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பிரிவு 294(1)(3) Cr.P.C மற்றும் பிரிவு 330 BNSS, விதி 293 Crp 2019ன் படி மனு தாக்கல் செய்து எதிரி தரப்பில் ஆட்சேபணை இல்லை எனப் பெறப்பட்டு மருத்துவ ஆவணங்கள் மற்றும் மோட்டார் ஆய்வறிக்கை குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** -

**இவ்**வழக்கு 28.01.2025ம் தேதி பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் விபத்து நடந்த தேதியானது 08.01.2025 என்று உள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை 20 நாட்கள் காலதாமதமாக பதிவு செய்யப்பட்டதற்கு எவ்வித சிறப்பு காரணமும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சம்பவயிடத்திற்கு நேரடியாக சென்று விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

நான் சொன்ன நாள் சொன்ன நேரத்தில் புகார் ஏதும் பெறப்படவில்லை என்றாலும் ஆஜர் எதிரி மீது இவ்வழக்கானது பொய்யாக கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும், ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN
Digitally signed by JESU BALAN
Date: 2026.05.14 15:14:09 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.